www.tamilarangam.net

# நசுக்கப்பட்டவை அல்ல எமது குரல்கள்
# ஒடுக்கப்பட்டவர்கள் அல்லர் எமது மக்கள்

## ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
## இறுதி வெற்றிவரை போராடும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பொறுத்தவரையிலோ, அன்றி தேச பக்தியுள்ள சிந்திக்கும் ஈழமக்களைப் பொறுத்தவரையிலோ, இன்று ஈழத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்கள் அதிர்ச்சியைத் தருவன அல்ல. இத்தகையதொருகசப்பான கட்டத்தை ஈழவிடுதலைப் போராட்ட வரலாறு என்றோ ஒரு நாள் கடந்தேயாகவேண்டும். அது இன்று நடந்துகொண்டிருக்கின்றது இந்நிலையில் இந்நிகழ்வுகளின் பின்னணிகள் என்ன? இச்சம்பவங்கள் எமக்குக் கற்றுத் தரும் பாடங்களை, நாம் எதிர்காலத்தில் எவ்வகையில் பிரயோகிக்கப் போகிறோம், என்பவையே இன்று எம்மனைவருக்கும் முன்னுள்ள பிரதானமான கேள்விகளாகும்.

சிந்திக்கும் ஈழமக்களைப் பொறுத்தவரையில் பிரசாரங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் நின்று விடயங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும். கடந்த காலங்களில் ஈழவிடுதலைப் போராட்டம் திம்பு பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, மக்கள் எழுச்சிகள், ஆர்ப்பாட்டங்கள், என்ற படிப்படியான தோற்றப்பாட்டு வளர்ச்சிகளைக் கண்டுவந்ததை, அனைவரும் அறிவர். இவ்வாறான கூட்டங்கள், ஊர்வலங்கள், வீதி மறிப்புப் போராட்டங்கள், ஆகியவை மக்கள் வீதிக்கு வருவதைக் காட்டுவனவாகவும் அமைந்தன. பெரும்பாலும் இவ்வகையான போராட்டங்கள் இயக்கங்களுக்கு அப்பால்பட்டு நிற்கும் பல்கலைகழக மாணவர் மன்றம், அன்னையர் முன்னணி, தொழிற்சங்கச்சம்மேளனம் போன்றஅமைப்புக்களாலேயே ஒழுங்குபடுத்தப்பட்டு வந்தன.

இந்நிலையிலேயே பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் ஆயுதம் தரித்த இளைஞர்கோஷ்டி ஒன்றினால் கடத்தப்பட்டான். இதைத் தொடர்ந்து தொடர்ச்சியான விஜிதரனைவிடுதலை செய்யக் கோரும் பல்வேறுபட்ட மாணவர் போராட்டங்கள், மக்கள் போராட்டங்கள் எழுச்சி பெற்றன. இந்தப் போராட்டங்களை அடக்குவதில் சிறிலங்கா நவபாசிச அரசை ஒத்தவகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் நடந்து கொள்ள ஆரம்பித்தனர். இனவெறியும் இரத்தவெறியும் பிடித்த அரச கூலிப்படைகளுக்கு எந்தவிதத்திலும் குறைந்ததல்ல தங்கள் அராஜகம் என்று காட்டும் வகையில் புலிகளின் நடவடிக்கைகள் அமைந்தன ஆயுத முனையில் பொதுமக்கள் மிரட்டப்பட்டனர்.

விஜிதரன் தொடர்பான பிரச்சனையில் தாம் விட்ட தவறை ஒப்புக்கொள்ளவோ அன்றி அப்பிரச்சனையில் தாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்றோ அங்குள்ள புலியியக்க இளைஞர்களுக்கு எதுவும் புரியவில்லை ஒரு தவறை மறைப்பதற்காக தொடர்ச்சியான பல தவறுகளை இழைத்தனர். இது தொடர்பான அனைத்து விளக்கங்களும் யாழ்.குடா நாட்டு மக்களுக்கு மிகத் தெளிவாகவே புரிந்திருந்தன. புலி இயக்கத்தினரின் இயக்க அராஜகங்களுக்கெதிரான இந்த மக்களின் எழுச்சியை தமது அரசியல் வறுமையின் காரணமாக தமக்கு எதிரானதெனத் தவறுகக் கணக்குப் போட்டதுடன் இந்த மக்கள் எழுச்சியை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தான் தூண்டிவிட்டிருக்கிறது என்று அவர்களது பாணியில்தீர்மானித்துக் கொண்டு மறைமுகமாகப் பிரசாரம் செய்துவந்தனர். அவர்களது கணக்கின்படி EPRLFஇல்லாவிட்டால் விஜிதரனின் விவகாரம் இந்த அளவுக்குப் போயிருக்காது என்பதாகும்..

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இதைவிட அமையப்போகும் ஈழத்தில் அல்லது புலிகளின் கணிப்பீட்டின்படியிலான மாகாண சபைகளில் புலிகளின் ஒரு கட்சி ஆட்சி நடைபெறுவதற்கும் அதற்கு பிரபாகரன் தலைவராவதற்குமான முந்நிபந்தனைகளில் முக்கியமானது மாற்றுக் கருத்துள்ள அனைவரும் ஆயுதத்தால் அழிக்கப்பட வேண்டும் என்பதாகும். அவர்களது இந் நீசத்தனமான கருத்தில் அவர்களது அரசியல் விஞ்ஞானியாகிய பாலசிங்கத்திற்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிலையில் தான் ரெலோ இயக்கப் போராளிகளும் மன்னார் முல்லைத்தீவு பகுதிகளில் தமது போராட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தார்கள். முல்லைத்தீவுப் பகுதியில் EPRLF முகாமில் இருந்த ரெலோ இயக்கப் போராளிகளைத் தம்மிடம் உடனடியாகப் ஒப்படைக்கும் படியும் அவர்களை உயிருடன் எரிப்பதற்கான ஆயத்தங்களுடன் வந்த LTTE யினர் EPRLF தோழர்களை மிரட்டினர். TELO இயக்கப் போராளிகளைப் ஒப்படைக்க மறுத்து LTTE யினரின் இந்தப்போக்கு தவறானது என்று சுட்டிக்காட்டிய EPRLF தோழர்கள் LTTE யினரால் கடத்தப்பட்டனர். இதனைத் தொடர்ந்தே EPRLF ஐ அழிக்க முயன்ற LTTE யின் திட்டமிட்ட தாக்குதல் முயற்சிகள் ஆரம்பமாகின. தாக்குதலுக்கு முன்னரேயே LTTE யினர் ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த TELO இயக்கம்மீதான அழித்தொழிப்பு நடவடிக்கைகளின் போது முன்வைக்கப்பட்டது போன்ற அறிக்கைகள் வெளிவரத்தொடங்கியுள்ளன.

EPRLF யினரை நிராயுதபாணியாக்கிவிட்டதாகவும் அவர்கள் தம்மிடம் சரணடைந்து விட்டதாகவும் EPRLF ஐ தடைசெய்திருப்பதாகவும் வடக்கு, கிழக்கு முழுவதும் இப்போது தாமே தனித்த இயக்கம் என்று LTTE அறிக்கைகள் முழக்கமிட்டன. திட்டமிட்டபடி சர்வதேச செய்தித்தாபனங்களுக்கும் பறந்தன. ஆனால் பி.பி.சி. செய்தி ஸ்தாபனம் உட்பட பல செய்தி ஸ்தாபனங்கள் இந்தச் செய்தியை ஒலிபரப்பிய சில மணிநேரத்துக்குள்ளேயே இந்தச் செய்தி தவறானது என்று உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன.

LTTE யின் இந்த அராஜகக் கூத்துக்காரணமாய் நாம் அவர்கள் மீது ஆத்திரப்படவில்லை. அவர்களுடைய அரசியல் வறுமையும், தாம் மாத்திரம் தனித்து போராட்டத்தை வென்றுவிடலாம் என்று கற்பனைவாதமும்தான் இன்றைய அவர்களுடைய வெறித்தனத்துக்குக் காரணமாகும். LTTE யினருடைய தளம்பல், குழம்பல் நிலைப்பாடுகள் இன்று பகிரங்கமாகிவிட்டன. இந்தியா தொடர்பானதெளிவில்லாத இரட்டை வேட நிலைப்பாடு....... தங்களை வளர்த்துக் கொள்வதற்காக தமிழ்நாட்டின் அரசியல் சகதியை அள்ளிப் பூசி தனி நபர்களுக்குப் பின்னால் தாளம்போடும் அரசியல் சந்தர்ப்பவாதம், இவை எல்லாவற்றையும் விட தனித்து எதையும் சாதித்துவிடலாம் என்ற கற்பனைவாதம்- தங்கள் கற்பனைகளைத் தாமே கட்டுப்படுத்த முடியாததால் ஏற்பட்ட வெறித்தனம் இவற்றின் மொத்தவடிவம் தான்புலிகள் என்பது வெளிப்படையாகிறது.

அதுமாத்திரமல்ல பாசையூர் எட்வேட் படுகொலை, விஜிதரன் கடத்தல் ஆகிய சம்பவங்கள் யாழ்.குடாநாட்டு மக்களின் பொறுமையின் எல்லையை உடைத்தன. எல்லை கடந்து செல்லும் இயக்க அராஜகம் அனைத்து மக்களுக்கும் ஏதோ ஒரு ஆபத்தை விளைவிக்கப்போவ

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தை உசுப்பியது. இதனால் மக்கள் கிளர்ந்தெழுந்து வீதிக்கு வந்தனர். மக்களின் சுயமான இந்தக் கிளர்ச்சிகளுக்கான காரணம் EPRLF என்று புலிகள் அரசியல் வறுமைகாரணமாக தவறான கணக்குப் போட்டார்கள். அதுமாத்திரமல்ல வீதிக்கு வந்துவிட்ட மக்கள் கூட்டம் எங்கே தங்களின் முடிவுரையை எழுதிவிடுமோ என்று புலிகள் அஞ்சினர். அந்திமகாலம் நெருங்குவதை அறிந்துகொண்ட அச்சம் புலிகளை தமது முதலாளித்துவ எஜமானர்களின் வழிகளை நாடும்படி தூண்டியது.

அதன் விளைவுகள் தான் சிறீலங்கா அரசாங்கத்தின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் மிஞ்சும்படியான புலிகளின் கசையடித்தண்டனை, கடத்தல்கள், தடுப்பு முகாங்கள், தீவிரத்தேடுதல் வேட்டைகள், சித்திரவதைகள், வெளியேற்ற உத்தரவுகள், படுகொலைகள், பத்திரிகைத் தணிக்கைகள், பேச்சுரிமை, போராட்ட உரிமை மறுப்புக்கள் ஆகிய அராஜகச் சட்டப் பிரகடனங்கள். பாசிசத்தை தனது சுயமொழியாகச் சுவீகரித்துக் கொண்ட ஜெயவர்த்தனாவிடமிருந்து தாம் எந்தவகையிலும் வேறுபடவில்லை என்பதை புலிகள் ஈழமக்களுக்குக் காட்டியுள்ளார்கள். பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தின்போது புலிகள் "சாகவிரும்புபவரை சாகவிடுங்கள். யாருக்கும் எந்த ஜனநாயக உரிமையும் வழங்கப்படமாட்டாது" எனப் பகிரங்கமாகச் சொன்னதும் புலிகளின் உண்மை ரூபத்தை தோலுரித்துக் காட்டியுள்ளது.

தமது வெற்றுக்கோஷங்களும், வெளிவேஷங்களும் கலைய ஆரம்பித்துவிட்டதால் எமது மக்கள் மீது அராஜகத்தைக் கட்டவிழ்த்து விட்டு, எமது மண்ணிலே அடக்குமுறை ஆட்சியைப் பிரகடனப்படுத்தியிருக்கும் புலிகள் இப்போது அவசரக் கோலத்தில் ஆக்கிரமிப்பு அரசோடு இரகசியப் பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள், கைகுலுக்கல்கள், விருந்துண்ணல்கள் என்றெல்லாம் கொண்டாடி மகிழ்கின்றனர். மக்கள் தமது அராஜகத்தை முறியடிக்க முன்னர் ஆக்கிரமிப்பாளரோடு கூட்டுச் சேர்ந்து ஏதாவது அற்ப சலுகையைப் பெற்றுவிட்டு அவர்களோடு சேர்ந்து எம்மக்களை அடக்குவோம் என்ற அவசரத்துடன் புத்தி பேதலித்து புலிகள் இயங்குவது இப்போது தெரிகிறது.

இத்தகையதொரு சிக்கலான கட்டத்தில் EPRLF இனராகிய நாம் தேசபக்தி கொண்டமக்களுக்குக் கூறுவதென்னவென்றால் "ஈழப்போராட்டத்தில் இன்று ஏற்பட்டிருக்கும் இந்த அவல நிலை எதிர்பார்க்காததோ அன்றி அதிர்ச்சிதருவதோ அல்ல. நீளமானதும் கடினமானதுமான போராட்டத்தை எதிர்கொள்ளக் கூடியவகையில் எமது இயக்கமும், தோழர்களும் தயார் செய்யப்பட்டவர்கள். எங்கள் மண்ணில் மீண்டும் ஒரு இரத்தக்களரி ஏற்படக்கூடாது என்ற காரணத்தினால் யாழ்.குடாநாட்டில் நாம் திட்டமிட்ட முறையிலே மக்கள் அரங்கிலிடையே மறைந்திருப்பதைப் பாவித்து, புலிகளினால் திட்டமிட்டுச் செய்யப்படும் பொய்பிரசாரம் எதனையும் கண்டு மக்களே நீங்கள் கலங்கத் தேவையில்லை."

ஏனெனில் உன்னதமான ஒரு இலட்சியத்தை அடைவதற்கு திட்டமிட்டு வகுக்கப்பட்ட பாதையிலே, மக்களைத் துணையாகக் கொண்டு போராடுபவர்கள் நாம். எம்மை யாராலும்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அழித்துவிடமுடியாது. நாம் போராட்டத்தில் சாவை எண்ணி சயனைட் குப்பிகளுடன் திரிவதில்லை. நாம் வாழ்வதற்காகப் போராடுகிறோம் அதனால் எப்படியும் மரணிக்கமாட்டோம் என்பதை நினைவுபடுத்துகிறோம்."

அராஜகவாதிகளால் இன்று எம்மக்களுக்கு ஏற்பட்டுவரும் துன்பங்கள் தற்காலிகமானவை. மக்கள் எழுச்சிக்கெதிரான எந்த அராஜகமுமே நிலைத்ததில்லை என்பதை எமது பூமியில் மீண்டும் ஒருமுறை எமது மக்கள் நிரூபித்துக்காட்டப் போகிறார்கள். எனவே மக்களே போராட்டத்தின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். தவறான பாசிசத் தலைமையின் பிழையான வழிகாட்டலில் புத்தி பேதலித்து நிற்கும் புலிகளுக்கு சரியான திசைவழியைக்காட்டுங்கள். எமது தேசத்தின் விடியலை வென்றெடுக்க அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளும் இணைந்து போரிடுவோம்.

யாழ் நகரில் .... இரத்தசாட்சியங்களாய் ஒவ்வொரு சம்பவங்களும் பதிந்து கொண்டிருக்கும் எமது பாச பூமியில் எம்மைக் கொல்வதற்காகக் குவிக்கப்பட்டிருக்கும் இராணுவக் கொலைஞர்களுடன் கூடிக்குலாவி, கைகுலுக்கி, விருந்துண்டு மகிழும் புலிகள் தேசத்தின் விடியலுக்காக, தேசமக்களுக்காக அனைத்தையும் துறந்து, போராட்டத்திற்கு தம்மை அர்ப்பணித்த, சக போராளிகளை கடித்து குதறிக் கொல்ல முற்படுகின்றன.

இரத்த வெறிபிடித்த இந்தக் கும்பல்தான் சத்தியம்-நேர்மை பற்றி வாய்கிழியப் பேசுகின்றன. தமது வளத்துக்காக போராட்டத்தை பலியிடக்கூடத் தயாராக இருக்கும் இந்தப் புலிகள்- இராணுவக் குவிப்பும், முற்றுகையும் அதிகரித்திருக்கும் இந்தக் காலகட்டத்தை தேர்ந்தெடுத்து EPRLFஐ தாக்க முயன்றதை மீண்டும் மக்கள் முன் சுட்டிக்காட்டுவதுடன் இவர்களுக்குப் பின்னணியாகவும் பிற்பலமாகவும் உள்ள சர்வதேச பிற்போக்குச் சக்திகள் பற்றி அவதானமாக இருப்பதுடன் கயமையும் கசப்பும் நிறைந்து கிடக்கும் இன்றைய இந்தப்பாடத்தை நாளைய விடியலுக்கான அனுபவப்பாடமாகக் கொள்வோம். புரட்சிகர சக்திகளின் அரங்களைப் பலப்படுத்துவோம்.

மரணத்தைக் கண்டு
நாம் அஞ்சவில்லை
ஒரு அநாதைப் பிணமாய்
ஒரு அடிமையாய்
புதிய எஜமானர்களுக்காக
தெருக்களில் மரணிப்பதை
நாம் வெறுக்கிறோம்

உண்மையை
மறுப்பவர்களிடம் கூறுங்கள்
எங்கள் மரணம்
அது
ஒரு முடிவல்ல

ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி
(பிரான்சுப் பிரிவு)
10, RUE DES MARTYRS
75009 - PARIS.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்